**Starting time 11.22 A.M.**

# IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF, ATTUR

**O.S. No. 333/2012**

Deposition of **P.W.1** witnesses for Plaintiff Solemnly affirmed by Tmt. K. Janaki, Gr. III Bench Clerk of this court, on 24.01.2023 in accordance with the provisions of Act 1 of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | : பொன்னம்மாள் | Father's Name | : |
| Village | : | Taluk | : |
| Caste | : | Religion | : |
| Calling | : | Age | : |

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை** : எனது கணவருடன் பிறந்தவர்கள் மொத்தம் எத்தனை பேர் என்றால், என் கணவரையும் சேர்த்து 3 பேர் ஆவார்கள். என் கணவருக்கும், அவருடன் பிறந்தவர்களுக்கும் எப்போது பாகப்பிரிவினை நடந்தது என்றால், பாகம் பிரித்துக் கொண்டார்கள். ஆனால், தேதி நினைவில் இல்லை. தாவா சொத்து எனக்கும் மட்டும்தான் சொந்தம் என்று விளம்புகை செய்யக் கோரி நான் ஏற்கனவே ஒரு வழக்கு தாக்கல் செய்திருந்தேனா என்றால், இல்லை.

2. எனது கணவருக்கும், அவருடன் பிறந்தவர்களுக்கும் இடையே எழுதிக்கொண்ட பாகப்பிரிவினை பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால், செய்துள்ளேன். தாவா சொத்துக்களுக்கான வருவாய்த்துறை ஆவணங்களையும் தாக்கல் செய்துள்ளேனா என்றால், செய்துள்ளேன். தாவா சொத்துக்களுக்கான வருவாய்த்துறை ஆவணங்கள் தற்போது வரை யார் பெயரில் உள்ளது என்றால், என் கணவர் பெயரில்தான் உள்ளது. வருவாய்த்துறை ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால், செய்துள்ளேன். தாவா சொத்துக்கான வருவாய்த்துறை ஆவணங்கள் 2012-ம்

ஆண்டுவரைதான் என் கணவர் பெயரில் இருந்தது என்றும், அதன் பின்னிட்டு 2, 3 பிரதிவாதிகள் பெயரில் மாற்றப்பட்டுள்ளது என்றால், சரியல்ல.

3. என் கணவர் காலமானபோது ஈமசடங்குகளுக்கான செலவுகளை யார் செய்தது என்றால், எனது உறவினர்கள் செய்தார்கள். என் கணவர் காலமான பிறகு நான் யாரிடம் கடன் வாங்கினேன் என்றால், செல்லமுத்து மற்றும் செல்வம் என்பவர்களிடம் வாங்கினேன், அந்த கடனை அடைக்க 1-ம் பிரதிவாதி சன்னாசியிடம் ரூ.30,000/- கடன் வாங்கினேன். 1-ம் பிரதிவாதியிடம் ரூ.30,000/- கடன் வாங்கிய அன்றே அவர் பெயரில் ஆவணம் எழுதிக் கொடுத்தேனா என்றால், ஆமாம். பணம் எங்கு வாங்கினேன் என்றால், சார் பதிவாளர் அலுவலகத்தில் வாங்கினேன். 1-ம் பிரதிவாதியிடம் கடன் வாங்கி ஆவணம் எழுதிக் கொடுத்த போது யார் யார் உடன் இருந்தார்கள் என்றால், சாந்தானந்தம் என்பவரும், தங்கதுரை என்பவரும் இருந்தார்கள். 1-ம் பிரதிவாதி பெயரில் எழுதிக் கொடுத்த ஆவணம் எங்கு எழுதப்பட்டது என்றால், சார் பதிவாளர் அலுவலக வளாகத்தில் எழுதப்பட்டது. ஆவணம் பதிவு செய்தபோது நானும், சாட்சிகளும், சார் பதிவாளர் முன்னிலையில்தான் கையெழுத்து செய்தோம் என்றால், சரிதான்.

பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

Ending Time : 11.38 A.M.

**ஒப்பம்/- ஜி.யுவராஜ்**

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஆத்தூர்.**